காந்தியம் வீழ்க!          சமதர்மம் வாழ்க!

# காந்தி கண்டனக்கீதம்.

———:O:———


ஆக்கியோன்:

மணிநீலன் (A. முத்துகிருஷ்ணன்)



வெளியிடுவோர்:

P. R. குப்புசாமி அவர்கள்.

1934.

காந்தியம் வீழ்க! சமதர்மம் வாழ்க!

# காந்தி கண்டனக்கீதம்.

—:0:—

ஆக்கியோன்:

மணிநீலன் (A. முத்துகிருஷ்ணன்)

Pudupalayam

வெளியிடுவோர்:

P. R. குப்புசாமி அவர்கள்.

1934.

Price 0 1 0

உண்மைவிளக்கம் பிரஸ்,
ஈரோடு.

# காந்தி கண்டனக்கீதம்.

## விருத்தம்.

ஒருமையுடன் காந்தியைப் பின்பற்று வோர் தமது
உன்மத்தம் தெளியவேண்டும்

உளவான "ஹரிஜன" இயக்கமதின் சூழ்ச்சியை
உலகறிய செய்யவேண்டும்

பெருமை பெறுசமதர்மம் பேசவேண்டும், பித்த
மதமதைப் பெயர்க்கவேண்டும்

பிழைமலியும் பார்ப்பனர் முதலாளி தனவந்தர்
பெயரெலாம் மறைய வேண்டும்

வறுமையாம் வழக்கமும் தெய்வ நம் பிக்கையும்
வாழ்வினிற் தகர்க்கவேண்டும்

வருணாஸ்ரமங்களும் வைதீகப் பேய்களும்
வாழாது மாள வேண்டும்

தருமநெறியில்லாத தான்றோன்றித் தலைவர்களின்
தன்மையை எதிர்க்கவேண்டும்

தனிவுடமை தவிரவும் பொதுவுடமை பரவவும்
சமநீதி தோன்ற வேண்டும்.

"காமி சத்தியபாமா" இசை.

பல்லவி.

காந்தி தென்னுடடைந்தால் கண்டனம் செய்குவீர்
கண்டனம் செய்குவீர் செ. செ. செ. (கா)

அநுபல்லவி.

சாந்திவழிநில்லாத தன்னல வெறியரைச்
சார்ந்த தரகரல்லவோ அல்லவோ அ. அ. (கா)

ஏழைகள் படுந்துயர் எள்ளளவும் அசைக்க
கோழை காந்தியால் ஆகுமா ஆ. ஆ. ஆ. (கா)

முப்பதாறுகோடி மக்கள் முன்னேற்றந் தடுக்க
செப்பும் காந்திய போதனை போ. போ. போ. (கா)

மணிநீலன் தமிழ்ப் பதம் மக்களுக்குகந்தது
கனிவாயிதனை யோசிப்பீர் யோ. யோ. யோ. (கா)

---

பல்லவி.

நியாயந்தானே நீர் சொல்லும் ஓய் காந்தியாரே! இது
நீதிக்கடுக்குமோ? (நியா)

அநுபல்லவி.

தாயகத்திற்குழைப்பேன் என்றீர் — பொல்லா
தனவந்தர்கள் கொழுக்க யிசைந்தீர் — இப்போ
மாயவஞ்சகத் தொழில் கொண்டீர் — பொருள்
மயக்கி பறிக்கும் வழி கண்டீர் — ஐயா (நி)
சேர்க்கும் பணமுடிப்பு எதற்கோ — ஏழை
தீண்டாதமக்கள் பிழைப்பதற்கோ — அன்றி
எய்க்கும் கூட்டத்தார் வளர்வதற்கோ—சாகும்
இந்து மதமின்னும் உய்வதற்கோ — இது (நி)

தாழ்ந்தவர்கள் உயர்தல் என்று? — அவர்
தனித்தொகுதி கெடுத்தீ ரன்று — உங்கள்
ஆழ்ந்த தந்திரமெல்லாம் நன்கு — மிக
அறிந்து கொண்டோம்போவீ ரகன்று—இனி (நி)

தீய தியற்றும் மூடப் பழக்கம் — இன்னும்
தீர்க்க முடியாத நும் மியக்கம் — தன்னை
நேயமாய் பின் பற்றுவோர் மயக்கம்—நீங்கும்
நெறி மணிநீலன்கவி முழக்கம் — இது (நி)

---

"ஞான பண்டித மோதிலால்" இசை.

---

பல்லவி.

பகிஷ்காரம் காந்தீயமே பண்ணுவோம் நாமே (ப)

அநுபல்லவி.

மகிழ்வுறவே நிதம் மட்டிச்சோம்பேறி வர்க்கம்
மதப்போர்வைதனில் நுழைந்தார் மதியிழந்தார் (ப)

(தொகையறு)

முன்னமேர் ராண்டிலே கொள்ளைகொண் டேபணம்
முடிப்பாக சேர்த்துச்சென்றார்
வன்னெஞ்சப் பார்ப்பனரும் வண்ட முதலாளிகளும்
வாடாமல் கொழுத்ததன்றி
என்ன அதனாற்பலன் ஏழைகளடைந்தனர்
இதுவரையி லெடுத்துரைக்க
இன்னமும் ஏமாற்றுக்காரர்களின் சூழ்ச்சியே
ஏற்ற "ஹரிஜன" சேவைதான்

பாட்டு.

ஆதரவிலாதுழலும் ஆதித்திராவிடரை
வாதனை செய்யும் ஏமாற்று வஞ்சகர் கூற்று (ப)

(தொகையரு)

மெத்தை மாடியிலுலவி பஞ்சணையிலேபுரள
மேனி நுடங்காது கொழுப்போர்
அத்தனைபேருந் திருவின் புத்திரராமென்னவே
அறியாமைக் காதாரமாம்
சொத்தை உபதேசத்தால் எளியவரைத்திருப்தி செய
சூதாகச் சொல்லி எங்கும்
மெத்தபணக்காரரின் கைக்குழவியாகியே
மிக்க தற்பெருமை நாடி

பாட்டு.

அகங்கார வைதீகர் அக்ரம கிராதகர்
அகம்வருந்தாமல் நடப்பார் கீதை படிப்பார் (ப)

(தொகையரு)

சூத்திரர்கள் ஸ்தானத்தில் தாழ்ந்தவர்களிருந்தின்னும்
சொல்லொணு இழிவு எய்த
சாத்திரத்தின் வெறி கொண்ட காந்தியார் மென்மேலும்
சாதிப்பிரிவே நிலைக்க
தோத்திரம் செய் பார்ப்பனரின் கையாளாய் இந்துமத
பிரசாரத் துறையிறங்கும்
யாத்திரையில் பணவேட்டையாடிடத் தொண்டரொடு
யாங்கணுந்திரிகின்ருரே.

பாட்டு.

கோரும் பண் முடிப்பு எலாம் கொடுப்பதிலோர்
நன்மையுண்டோ?
தேரும் மணி நீலன் பதமே செப்பும் விதமே (பகி)

---

"காந்தியோ பரம ஏழை சந்யாசி" இசை.

"காந்தியோ கபடவேட சந்யாசி
கருதுஞ்சுதந்திரம் துலங்கிடாத்தோஷி
தேய்ந்த மத தத்துவம் தெளிவிலாப் பேசி
தியக்கமுறு வழியைச் செய் உபதேசி

(தொகையரு)

பாம்புக்கு வால்காட்டி மீனுக்கு தலைகாட்டும்
பார்ப்பன தாசர் காந்தி
வீம்புக்குத் தீண்டாமை விலக்குவேன் என்பதோடு
வெளிவேஷ நடிப்பதாகும்.

பாட்டு.

சார்ந்த சோதரர் சத்துரு போல
சகத்தினில் தோற்றிய மனித ரிக்காலே
ஆழ்ந்த வறுமைப்பிணி ராட்டினத்தாலே
அணுவும் அசைந்திடுமோ சாற்றுமிக்காலே

(தொகையரு)

கடவுள், மதம், தேசியம், கதர் எலாம் மக்களை
கண்மூடித் தன்மையாக்கும்

திடமாக இவைகளைக் குழிதோண்டி புதைப்பதால்
தீவிர முற்போக்காக்கும்

பாட்டு.

மாசு பெறுங்காந்தியார் வழியினைச்சாரோம்
மதக்கிறுக்கேறிய ஆளெனத்தேர்வோம்
நேசமணி நீலன்சொல் சமதர்மம் சார்வோம்
நியாயவழி யுணர்ந்து யாவரும் வாழ்வோம்.

---

"ஐயா பழனிமலை வேலா" இசை.

---

இராகம்—சஹானா. தாளம்—ஆதி.

கண்ணிகள்.

எல்லா முணர்ந்த பெரியோரே — நன்றாய்
ஏய்க்கும் வழியில் சிறந்தீரே — வெறும்
சொல்லால் மஹாத்மாவென்றீரே— உங்கள்
சூது தெரிந்தோம் அகல்வீரே (எ)

வரவேற்பு பத்திரங்கள் ஏலம் — அதை
வாங்குவோர்க் கென்ன அநுகூலம்
தரவே குழந்தை நகைகள் மேலும்—ஆசை
தட்டிப்பறிப்பதென்ன கோலம் (எ)

தீண்டாமை தீர்ப்பதெனும் சாக்கு—பொய்
தெரிந்தோம் வர்ணாஸ்ரமப் போக்கு
வேண்டாம் மக்களை கேவலமாக்க—மத
வீண் பிரசாரம் யாரைக் காக்க (எ)

வாட்டும் மதகுருக்கள் கூட—நும்
வண்டதனத்திற்கிடாக
மாட்டார் மஹான் மயக்கம் ஓட—எங்கும்
மணி நீலன் தமிழ்ப் பதம்பாட (எ)

---

"அடைக்கலமே அடைக்கலமே" இசை.

---

இராகம்—ஆரபி. தாளம்—ஆதி.

பல்லவி.

தந்திரமே தந்திரமே
தன்னலவெறியர்கள் பிழைப்பதற்கிது ஒரு (த)

அநுபல்லவி.

இந்த சமயம் வேறு வேலை இல்லாமல்
இருப்பதினாலே காந்தி "ஹரி ஜன" சேவையெனும் (த)

சரணம்.

சட்ட மறுப்பு முதல் யாவையும் துறந்தார்
சர்க்காரை எதிர்த்திடும் சங்கதி மறந்தார்
பட்டினி உண்ணாவிரதம் பலமென நினைத்தார்
பஞ்சமர் தூதனெனும் பகட்டினைப் புனைந்தார் (எ)

சுற்றுப் பிரயாணத்தின் சூட்சமம் பாரும்
சூழ்ந்த பார்ப்பனப் பேய்கள் கட்டியங் கூறும்
எத்து செய்வதால் பணமுடிப்புகள் சேரும்
ஏழைத் தொழிலாளர்க்கு பாதகம் நேரும் (த)

கோவில்கள் யாவும் விபசாரஞ்செய் சாலை (என்று)
கூறின காந்தி அதை மறந்து இவ்வேளை
கோவிலில் புகுத்திடத் தாழ்த்தப் பட்டோரை
கூவி அழைப்பதென்ன குண்டுணிவேலை (த)

ஜவஹர்லால் உணர்ச்சியைத் தடுக்குங் கபோதி
சமதர்ம வழியினைச் சாரா விரோதி
தவரிஷி, மஹான், எனும் தன்மையைச் சோதி
தைர்யமாய் மணி நீலன்தமிழ்ப் பதம் ஒதி

---

"கிளிக்கண்ணி"

---

பஞ்சப் பிணிக்காதாரப் பாழும் முதலாளிகள்
மிஞ்சிக் கொழுக்கும்படி கிளியே
விரும்புகின்றார் காந்தியடி.

வறுமைக் குடி மக்களை வாட்டும் ஜமீன்மிராசு
கொடுமைக் கிடம் பெருக கிளியே
கூறுகிறார் ஆசீர்வாதம்.

ஆதி ஹிந்து மக்களை ஹரி ஜனமென்று சொல்லி
சாதி மதம் வளர்க்க கிளியே
தந்திரம் செய்கின்றாரே.

தீண்டாமை நோயை எந்நாள் தீர்க்க முடியுமென்று
வேண்டி நாம் கேட்போமானால் கிளியே
வீணாய் மழுப்புகின்றார்.

வழுக்கைத் தலை காந்திக்கு வறண்டதோ மூளை எல்லாம்
அழுக்கு மதத்தி லின்னும் கிளியே
அழுந்தி யுழலுவதேன்?

இந்த காந்தியால் தேயம் எந்த நன்மை யடையும்
சந்த மணி நீலன்சொல் கிளியே
சமதர்மம் வேணுமடி.

---

"காந்திரிஷி" என்ற கிராம்போன் பாட்டுக்கு மறுப்பு:

---

அதே இசை

பல்லவி.

காந்தி முனி நம்மைக் காத்திடுவ தேதினி (கா)

அநுபல்லவி.

காந்தி முனிவர் கையில் ஆகாதினி
நம்மைக் காத்திடுவ தேதினி

வேறு சந்தம்.

வருணாஸ்ரமக் கொடுமை நீக்கவகை யுணரா முன்னம்
வாட்டுகின்ற தீண்டாமையை ஓட்டுகின்றேன் என்னும்
கருத்திலாத முறையிதுவே காந்தி தமது எண்ணம்
கண்டபடி நடந்து நம்மை கலக்குகின்றார் இன்னும்

(பாட்டு பல்லவி மாதிரி.)

கட்டாயமே அவர் இட்ட திட்டம் தவறும் (கா)

வேறு சந்தம்.

தாழ்ந்த வர்க்குத் தனித் தொகுதி தரவொணாது
[கெடுத்தவர்
தர்ம ராஜ்ய மில்லா ராம ராஜ்யத்தை அடுத்தவர்

ஆழ்த்த இன்னும் தாழ்ந்தவர்க்கு "ஹரிஜன" பட்டம்
[கொடுத்தவர்
அறிவு வேலை செய விடாமல் பகவத்கீதை படித்தவர்.

(பாட்டு பல்லவி மாதிரி.)

ஆண்டவனார் தரும் ஆணையென்றே மிரட்டும் (கா)

வேறு சந்தம்.

முன்னுக்குப் பின் தோழர் காந்தி முரண்படுதல்
[இயற்கையே
மூட நம்பிக்கைக்கு விதை தூவுதல் இவர் செயற்கையே
எண்ணரிய ஏழைத் தொழிலாளர் துன்பம் குறைக்கவே
ஏது வேலை செய்தாரிந்த ஐம்பதாண்டில் உரைக்கவே.

பாட்டு.

இல்லை இல்லை கடவுள் பேரால் தொல்லையடையும் (கா)

வேறு சந்தம்.

சாதித்தொல்லை சமயத்தொல்லைசாமிதொல்லைஒழிந்ததா?
சாராயங்கள் குடியர்கலகம் சற்றுகிலும் தணிந்ததா?
சாஸ்திர பூச்சாண்டி காட்டி ஏய்க்கும் கூட்டம்
அழிந்ததா?
சாத்மீகப் போர் சட்ட மறுப்பால் பயனேதேனும்
விளைந்ததா?

பாட்டு.

சாற்றும் மணிநீலன் புகழ் சமதர்மம் காக்கும் (கா)

## "பண்டித மோதிலால் நேரு" இசை

இராகம்—தேசிகதோடி தாளம்—ஏகம்

### பல்லவி.

ஆலயப்ரவேசம் செய்தால் அடிமை நீங்குமோ?
அடிமை நீங்குமோ தாழ்ந்தவர்கள் சிறுமை நீங்குமோ?
(ஆ)

### அநுபல்லவி.

காலமெல்லாம் உழைத்தலுத்தார் கடும்பசியால்
வாடிநொந்தார்
கால்வயிற்றுக் கஞ்சியேனும் கடவுள் வார்க்குமோ
கடவுள் வார்க்குமோ மேலும் கடையராக்குமோ (ஆ)

### (தொகையரு)

நாற்றநிறைச்சேரியை ஏற்றமாடி வீடுகளாக
நல்குமோ சுகவசதியாய்

நல்வாழ்வுக் காதார செல்வமொடுகல்வியும்
நயமாகச் சார்ந்துவிடுமோ

சாற்றிடும் ஹரிஜனப் பெயரேதற் குதவுமது
தாழ்ந்தவரைக் கைதூக்குமோ

சத்யாவதாரமெனும் பொய்ப்புகழ் காந்தியர்
செய்தொண்டு சாலவிந்தை!

இந்நூலாசிரியரால்
இயற்றப்பெற்ற
காந்தி கண்டன கீதம்
2-ம் பாகம்
சுயமதிப்புக்கீதங்கள்
பலிவிலக்குப்பாடல்
ஆகிய புத்தகங்கள்
விரைவில் வெளிவரும்.